# உகந்த சமூக ஊடகப் பயன்பாட்டிற்கான வழிகாட்டுதல்களின் தொகுப்பு

**(சமூக ஊடக தளங்களில் தகுந்த நடத்தையை வெளிப்படுத்துவோம்.)**

**ஊடக சட்ட மன்றம்**

# உகந்த சமூக ஊடகப் பயன்பாட்டிற்கான வழிகாட்டுதல்களின் தொகுப்பு

**(சமூக ஊடக தளங்களில் தகுந்த நடத்தையை வெளிப்படுத்துவோம்.)**


அச்சுப்பதிவு
R & C Gragics
180/ A, கிரிகம்பமுனுவ,
மத்தேகொட.
0112172324

பதிப்பு
ஊடக சட்ட மன்றம்
இல 170,முதல் மாடி
புதுக்கடை வீதி
கொழும்பு 12

தொலைப்பேசி இலக்கம்: 074 3070888
ைகெழளுஅநனையடயறகழசரஅ.ழசப

2024 ஏப்ரல

# அறிமுகம்

தற்போது, சமூக ஊடகங்கள் மக்களுக்கான முதன்மையான தகவல் தொடர்பு சாதனமாக உருமாறியுள்ளது. ஜனவரி 2024 க்குள், உலகளாவிய சமூக ஊடக பயனர்கள் 5 பில்லியனைத் தாண்டிவிடுவார்கள் என்றும், இலங்கையில் மட்டும் 7.5 மில்லியன் சமூக ஊடக பயனர்கள் இருப்பார்கள் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. 2029 ஆம் ஆண்டளவில், இந்த எண்ணிக்கை இலங்கையில் 21.66 மில்லியனாக உயரும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்கள் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், முன்னேற்றுவதற்கும், குறிப்பாகக் கருத்துச் சுதந்திரத்தின் பரப்பை விரிவுபடுத்துவதற்கும் ஒரு வினைத்திறனான கருவியாக மாறியிருப்பது வெளிப்படையாகும். சமூக ஊடகங்கள் தனிநபர்களுக்கு அவர்களின் உரிமைகளைப் பற்றிக் கற்பித்தல், பொது உரையாடலுக்கான தளத்தை வழங்குதல், மனித உரிமை மற்றும் அரசியல் உரிமைகள் மீறுபவர்களை வெளிப்படுத்துதல், மனித உரிமைகளை வென்றெடுப்பதற்கான பிரச்சாரங்களைத் தொடங்குவதல் மற்றும் மேல் குறிப்பிட்ட உரிமைகளின் பாதுகாவலராகப் பணியாற்றுதல் ஆகியவற்றின் ஒரு முக்கிய வகிபாகத்தை தமது வசப்படுத்திக்கொண்டுள்ளன..

சமூக ஊடகங்கள் வழியாகக் கருத்துச் சுதந்திரத்தை விரிவுபடுத்துவது ஒரு நேர்மறையான வளர்ச்சியாக காணப்பட்டாலும், இது சமூகத்தில் எதிர்மறையான பின்விளைவுகளையும் ஏற்படுத்துகிறது. சில தனிநபர்கள் தங்களின் கருத்துச்சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்தும் போது மற்றவர்களின் உரிமைகள் மீறப்படுவதற்கும் வழிவகுக்கிறது. இத்தகைய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அல்லது தவிர்ப்பதற்கு, நன்கு மேம்பட்ட ஊடக கலாச்சாரம் கொண்ட சமூகங்கள் பல்வேறு உத்திகளைச் செயல்படுத்துகின்றன. சமூக ஊடக தளங்களைப் பயன்படுத்துவதை ஒழுங்குபடுத்துவதற்கான நடைமுறைக் கோட்பாடுகள் (ஊழனந ழக ீசயஉவைஉந) போன்ற வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்துவது அத்தகைய அணுகுமுறையின் ஒரு படியாகும்.

அதன்படி, ஊடக சட்ட மன்றமானது தற்போதைய சட்டக்கட்டமைப்பு சமூக விதிமுறைகள் தொழில்முறை நெறிமுறைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு சமூக ஊடக பயன்பாட்டிற்கான விரிவான வழிகாட்டுதல்களை வகுத்துள்ளது. இந்த நடைமுறைக் கோட்பாடானது சமூக ஊடக துறையில் முறையான நடத்தைகளுக்கு வழிகாட்டியாக இருப்பதுடன் சமூக ஊடக பாவனையாளர்கள் எவ்வகையான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எதனை மேற்கொள்ளக் கூடாது என்பதனையும் கோடிட்டு காட்டுகின்றது.

இந்த வழிகாட்டுதல் கையேடானது டிஜிட்டல் தளத்திற்கு எது உகந்த நடத்தை மற்றும் எது பொருத்தமற்ற நடத்தை என்பதை கோடிட்டுக் காட்டும் விதத்தில் தொகுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த வழிகாட்டுதல்கள் காலத்திற்கு காலம் மற்றும் சமூக விழுமியங்கள் அடிப்படையில் வேறுபடலாம் என்பதை கருத்தில்கொள்ளவும். மேலும் சமூக ஊடக தளங்களின் வணிக மற்றும் தனிப்பட்ட பயனர்களைக் கருத்தில் கொண்டு இந்தச் சிற்றேடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

## சமூக ஊடகங்களைத் திறம்பட பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள்.

### பயன்பாட்டிற்கு முன் கருத்தில் கொள்ள வேண்டியவை.

முதலில், பதிப்புரிமை மற்றும் கருத்துச் சுதந்திரம் ஆகிய இரண்டிற்கும் வரம்புகள் காணப்படுகின்றன என்பதை அங்கீகரிப்பது மிகவும் முக்கியமானது. கருத்துச் சுதந்திரம் அடிப்படை மனித உரிமையாக இருந்தாலும் கூட, அது சட்ட மற்றும் நெறிமுறை எல்லைகளுக்கு உட்பட்டதாகும். இந்த வரம்புகளை நிர்வகிக்கும் விதிகள் மற்றும் நெறிமுறை தரங்களுக்கு ˙ உங்களைப் பழக்கப்படுத்திக் கொள்வதோடு, உங்கள் புரிதல் தற்போதையதா என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

சமூக ஊடக ஆர்வலர்கள் மற்றும் சாதாரண குடிமக்கள் இருவரும் தங்கள் செயல்களை நிர்வகிக்கும் சட்ட கட்டமைப்பு தொடர்பான அடிப்படை அறிவை கொண்டிருப்பது அத்தியாவசியமாகும். ஒரு சமூக ஊடக ஆர்வலராக, சட்ட விதிமுறைகளைப் புரிந்துவைத்திருப்பது சட்ட வரைமுறைகளை மீறுவதை தவிர்ப்பதற்கும், சட்டங்களின் நியாயத்தன்மையை கண்டறிவதற்கும் தேவைப்படுகின்ற பொழுது தரவுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கும் இன்றியமையாததாகும்.

நீங்கள் சமூக ஊடகங்களில் பயனராகவோ அல்லது ஆர்வலராகவோ ஈடுபட்டாலும், உங்கள் நடத்தை அவதூறு வழக்குகள், அறிவுசார் சொத்து தகராறுகள், பாலியல் அல்லது உளவியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகள் மனித உரிமை மீறல்கள் ஆபாசமான அல்லது வெறுக்கத்தக்க பேச்சு போன்ற குற்றச்சாட்டுகளை ஏற்படுத்தக்கூடும். இதை மனதில் கொள்ள வேண்டியது அவசியம். இத்தகைய சூழ்நிலைகள் ஏற்பட்டால், சட்டத்தை அறிந்திராமை என்று கூறுவது சாத்தியமான தற்காப்பு அல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

சமூக ஊடக பயன்பாட்டுடன் தொடர்புடைய சட்ட விதிமுறைகள் ஊடகங்கள் மற்றும் சர்வதேச நெறிமுறை வழிகாட்டுதல்களைப் புரிந்துகொள்வது உங்கள் ஈடுபாட்டை மேம்படுத்த உதவும். பெரும்பாலான சமூக ஊடக தளங்கள் பயனர் பாதுகாப்பை நிலைநிறுத்துவதற்கும் உயர் தரத்தை பராமரிப்பதற்கும் வழிகாட்டுதல்களை செயல்படுத்தியுள்ளன. இந்த வழிகாட்டுதல்களுக்கு உங்களைப் பழக்கப்படுத்துவது பொறுப்பான பயன்பாட்டிற்கு அவசியமாகும்.

## சட்டத்தை கடைபிடியுங்கள், நெறிமுறை தரத்தை பின்பற்றுங்கள்.

சட்டம் மற்றும் நெறிமுறைகளைப் புரிந்துகொள்வது என்பது விழிப்புணர்வு மட்டுமல்ல மாறாக அன்றாட வாழ்வில் அவற்றைக் கடைப்பிடிப்பதற்காகும். சட்டங்கள் அவற்றின் இருப்பு காரணமாக மட்டும் பின்பற்றப்படாமல், அந்தச் சட்டங்கள் பாதுகாக்கும் உரிமை தொடர்பான கொள்கைகளை அங்கீகரித்து அதனைப் புரிந்துகொண்டு விருப்புடன் கீழ்படிய வேண்டும். நீங்கள் ஒரு சட்டத்தை நியாயமற்றதாகவோ அல்லது பொருத்தமற்றதாகவோ கண்டால், எதிர்ப்பை மட்டுமல்ல, அதை மாற்றுவதற்கு வாதிடவும் உங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தவும் உங்களுக்குப் பூரண சுதந்திரம் காணப்படுகின்றது. இது ஒரு சமூக ஊடகப் பயனாளியாக மட்டுமல்ல, ஒரு பொதுக் குடிமகனாகவும் உங்கள் பொறுப்பும் கடமையும் ஆகும்.

நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதும் இதே அடிப்படையில் ஆகும். விதிமுறைகளுக்குக் கட்டுப்படுவதற்கான சட்டப்பூர்வ ஆணை காணப்பட்டாலும், அத்தகைய உத்தரவுகளோ ஆணைகளோ நெறிமுறைகளுக்குப் பொருந்தாது. நெறிமுறைகளை செயற்படுத்துவதற்கு அல்லது நிலைநிறுத்துவதற்கான தீர்மானம் முழுமையாகவே உங்களிடம் மாத்திரமே தங்கியுள்ளது. எனவே, அதன் அடிப்படைக் கருத்துக்கள் மற்றும் சமூக முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வது இன்றியமையாததாகும். நெறிமுறையாக வாழ்வதென்பது அதை ஒரு வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொள்வதாகும்.

**நீங்கள் உங்களுக்கு உண்மையாக இருங்கள்.**

தனிநபர்கள் தங்கள் உண்மையான அடையாளங்களை மறைத்துச் சமூக ஊடகங்களில் புனைப்பெயர்களை போலியாக இட்டுக்கொள்ளும்போது குறிப்பிடத் தக்க பிரச்சினைகள் எழுகிறது. சமூக ஊடக ஆர்வலர்களுக்கு, ஒரு மாற்று அடையாளத்தின் கீழ் அல்லது அநாமதேயமாகச் செயல்படும் விருப்பம் தனிப்பட்ட பாதுகாப்பு கருதி (குறிப்பாக முக்கியமான தகவலைப் பகிர்ந்துகொள்ளும் சந்தர்ப்பங்களில்) அவர்களுக்கு அவசியமாக இருக்கலாம். இருப்பினும், ஆதாரமற்ற, சரிபார்க்கப்படாத அல்லது தவறான உள்ளடக்கத்தைப் பரப்புவதற்கு அல்லது மற்றவர்களின் உரிமைகளை அநியாயமாகத் தாக்குவதற்கு அல்லது மீறுவதற்கு உங்கள் உண்மையான அடையாளத்தை மறைத்தால், நீங்கள் சமூக ஊடக பிரஜைகளின் ஒருமைப்பாட்டைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறீர்கள்.

சமூக முன்னேற்றத்திற்காக வாதிடும் ஒரு இடித்துரைப்பாளர்கள் (whistleblower) என்ற முறையில், தனிப்பட்ட பாதுகாப்பிற்காக உங்கள் அடையாளத்தைப் பாதுகாக்க உங்களுக்கு உரிமை உள்ளது. இருப்பினும், எந்தவொரு நோக்கத்திற்காகவும் வேறொருவரின் அடையாளத்தைப் பயன்படுத்துவது அனுமதிக்கப்படாது. சமூக ஊடக தளங்களில் பரவலாக செல்வாக்கு மிக்க நபர்களின் பெயர்களில் (நடிகர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் போன்ற) சமூக ஊடக கணக்குகளை நிறுவி அதன் ஊடாக கருத்துக்களை பதிவிட்டுவருகின்ற தவறான செயற்பாடொன்று இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய ஏமாற்று சுயவிவரங்களைப் பராமரிப்பதானது சமூகத்தைத் தவறாக வழிநடத்துவதுடன் உண்மையான தனிநபரின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் அதே வேளையில் அவர்களின் தனியுரிமையும் மீறப்படுகின்றது.

சமூக ஊடக இருப்பு.்.வாழ்க்கை மற்றும் நிஜ வாழ்க்கை என்பது வேறுபட்ட இரு விடயங்களாகும்.

உங்கள் சமூக வாழ்க்கை மற்றும் சமூக ஊடகங்களில் உங்கள் இருப்பு ஆகியவை வேறுபட்ட தனித்தனி விடயங்களாகும். தனிப்பட்ட விடயங்களைப் பற்றிய தனியுரிமையைப் பேணுவதோடு சமூக ஊடகங்களைத் தனிப்பட்ட நாட்குறிப்பாகக் கருதுவதைத் தவிருங்கள். மேலும், இடுகைகள், பகிர்வுகள், தொடர்புகள் மற்றும் ஒட்டுமொத்த நடத்தை உட்பட உங்கள் மெய்நிகர் செயற்பாடு, சமூக ஊடக சமூகத்தில் மற்றவர்கள் உங்களை எப்படி உணருகிறார்கள் என்பதை வடிவமைக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நீங்கள் ஏற்கனவே அறிந்தவற்றைப் மேலும் மேம்படு த்திக்கொள்வதுடன்,அறியாதவற்றை அறிந்துகொள்ளுங்கள்.

தனிப்பட்டமுறையிலோ அல்லது தொழில்முறை.∵.வணிக அடிப்படையிலோ சமூக ஊடகங்களில் சரிபார்க்கப்படாத உள்ளடக்கத்தை இடுகையிடுவதையோ அல்லது பகிர்வதையோ(ளூாயசந) தவிர்ப்பது அவசியமானதாகும். உங்களுக்கு நிச்சயமில்லாத தகவலை அந்த போலியான தகவல் பரவும் காரணத்தால் குறித்த தகவல் தொடர்பில் உங்களுக்குச் சந்தேகம் இருந்தால், மறுபதிவு செய்வதையோ அல்லது பகிர்வதையோ தவிர்க்கவும், ஏனெனில் அது தவறான அல்லது பிழையான வழிநடத்தலுக்கு காரணமாக அமையலாம். நம்பகத்தன்மையற்ற உள்ளடக்கத்தைத் தொடர்ந்து பகிர்வது, உங்கள் மீதுள்ள நம்பகத்தன்மையை சிதைத்து, நீங்கள் வழங்கும் துல்லியமான தகவலைக் கூட மற்றவர்கள் எதிர்காலத்தில் நம்புவதற்கு சவாலாக அமையக்கூடும்.

நம்பகத்தன்மை என்பது பத்திரிகையாளர்களுக்குக் காணப்படவேண்டிய அடிப்படைப் பண்பாகும், அதே பண்பு சமூக ஊடக பயனர்களுக்கும் பொருந்தும். உண்மைத்தன்மை என்பது மற்றவர்கள் மதிக்கும் தார்மீக பண்பாகும்.

நீங்கள் உண்மையையும் நேர்மையையும் நிலைநாட்டும்போது, சமூகம் உங்களிடம் உண்மையாகவும் நேர்மையாகவும் இருக்கும். இந்தப் பரஸ்பர நம்பிக்கை ஒட்டுமொத்த சமூகத்திலும் நேர்மறையான செல்வாக்கை வளர்க்கிறது.

செய்திகள் புனிதத்தன்மையைக் கொண்டுள்ளன, அதே சமயம் கருத்துக்கள் பலவிதமான விளக்கங்களுக்கு திறக்கப்பட்டிருக்கும்.

நீங்கள் வணிகரீதியான சமூக ஊடகப் பயனர் எனின், செய்தி மற்றும் உங்களின் தனிப்பட்ட கருத்துக்களை ஒன்றிலிருந்து ஒன்று கலக்காமல் பகிருங்கள். மேலும், நம்பகத்தன்மையை அதிகரிக்க செய்திகளைப் பகிரும்போது எப்போதும் உங்கள் ஆதாரங்களை மேற்கோள் காட்டுங்கள். ஒரு ஆதாரம் ரகசியத்தன்மையைக் கோரினால், பொறுப்பான சமூக ஊடக நடத்தையை நிரூபிக்க அந்தக் கோரிக்கையை மதியுங்கள்.

நீங்கள் பெறும் அனைத்து தகவல்களும் புகாரளிக்க அல்லது பகிர்வதற்கு பொருத்தமானதல்ல. தகவல் துல்லியமாகவும் உண்மையாகவும் இருந்தாலும் கூட, வெளியிடுவதற்கோ பகிர்வதற்கோ பொருத்தமானது என்ற உத்தரவாதம் வழங்க முடியாது. எந்தவொரு தகவலையும் அல்லது கருத்தையும் பகிர்ந்து கொள்வதற்கு முன் பின்விளைவுகளைக் கவனியுங்கள். ஒரு யோசனை அல்லது தகவலைப் பரப்புவதற்கு முன், சமூகத்தில் அதன் சாத்தியமான தாக்கத்தைப் பற்றி சிந்தியுங்கள். சமூகத்திற்கு நேர்மறையாக பங்களிக்கும் யோசனைகள் அல்லது தகவல்களை மட்டும் பகிருங்கள். பாரம்பரிய ஊடகங்களைப் போலன்றி, சமூக ஊடகங்களில் ஒரு மையப்படுத்தப்பட்ட பதிப்புச் செயல்முறை காணப்படுவதில்லை. இங்கு உள்ளடக்கத்தைப் புகாரளிப்பதற்கும், அங்கீகரிப்பதற்கும், திருத்துவதற்கும் தனிநபருக்கு முழு சுதந்திரம் உள்ளது.

தவறுகள் ஏற்படலாம், ஆனால் மிக முக்கியமான தவறு அவற்றைச் சரிசெய்யத் தவறுகின்றமையே ஆகும்.

எவ்வளவு பெரிய நிபுணராக இருந்தாலும் , பிழைகள் ஏற்படலாம். தவறான தகவல்கள், போலிகள் அல்லது பொருத்தமற்ற உள்ளடக்கம் உங்களால் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டதாக உறுதிசெய்யப்பட்டால் உங்கள் தவறை உடனடியாக ஒப்புக்கொள்ளுங்கள். உங்களால் முடிந்தவரை பிழையைச் சரி செய்யத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். உங்கள் செயல்கள் ஒரு தரப்பினருக்கு தீங்கு விளைவித்திருந்தால், அவர்களை மீட்டெடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். குறைந்தபட்சம் உங்கள் சமூக ஊடகத் தளத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினர் தங்கள் கவலைகளைத் தெரிவிக்க ஒரு இடத்தை வழங்குங்கள். தவறுகளை ஒப்புக்கொள்வதும் சரிசெய்வதும் தொழில்முறையின் அடையாளமாக இருந்தாலும், அடிக்கடி ஏற்படும் பிழைகளைத் தவிர்ப்பது அவசியம், ஏனெனில் அவை உங்கள் தொழில்முறையியம் தரம்குறித்து சந்தேகத்தை ஏற்படுத்தலாம்.

தார்மீக அடிப்படையில் சரியானதை மாத்திரம் தேர்ந்தெடுத்து பின்பற்றுங்கள். மற்றவர்கள் அவ்வாறு செய்கின்றார்கள் என்பதற்காகத் தவறுகளை நியாயப்படுத்துவதைத் தவிருங்கள். பெரும்பான்மையானவர்கள் ஒரு குறிப்பிட்ட பிழையான கண்ணோட்டத்தைப் பகிர்ந்து கொண்டாலும், ஒரு பிழையை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாததாகவே இருக்கும். எனவே, தார்மீக ரீதியாக சரியானதை நிலைநிறுத்துவதற்கும், சிறுபான்மைக் கண்ணோட்டத்திற்காக வாதிடுவதற்கும், குறிப்பாக குழந்தைகளின் நலனில் அக்கறை காட்டுவதற்கு முன்முயற்சியுடன் நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்.

கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையில் அறிவுசார் சொத்து திருட்டில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

மற்றவர்களின் கருத்துக்கள், படைப்புகள் அல்லது அறிவை அவர்களின் அனுமதியின்றி பகிர்ந்து கொள்வதும், அவற்றை உங்களுடையது என முன்வைப்பதும் சமூக ஊடகங்களில் அதிகமாகக் காணக்கூடியதாக உள்ளது. அறிவுசார் சொத்துரிமையின் இந்த அங்கீகரிக்கப்படாத பயன்பாடு திருட்டு மற்றும் சட்டரீதியான விளைவுகளுக்கு வழிவகுப்பதோடு நெறிமுறை ரீதியாகவும் ஏற்றுக்கொள்ள முடியாதது.. மேலும் இது அவ்வாறு பகிருபவரின் திறமையின்மை மற்றும் அறியாமையை எடுத்துக்காட்டுகிறது. நீங்கள் வேறொருவரின் அறிவுசார் சொத்தைப் பயன்படுத்த விரும்பினால், உரிமையாளரிடமிருந்து தேவையான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுங்கள். அனுமதி கட்டாயம் இல்லையென்றாலும், உங்கள் இடுகையிலோ பகிர்விலோ அசல் படைப்பாளரின் பெயரைக் குறிப்பிடுவதன் மூலம் அவரை அங்கீகரியுங்கள்.

குடும்பம் அல்லது நெருங்கிய நண்பர்கள் போன்ற தனிப்பட்ட புகைப்படங்களைப் பகிரும்போது கூட, சமூக ஊடகங்களில் அவற்றை இடுகையிடுவதற்கு முன்பு அவர்களின் ஒப்புதலைப் பெறுவது மரியாதைக்குரியது.

சமூகவிரோத மோதல்களைத் தூண்டுவதற்கு கருத்து தெரிவிக்கும் சிறப்புரிமை தவறாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதிசெய்யுங்கள்.

சமூக ஒற்றுமையை சீர்குலைக்கக்கூடிய இனவெறி அல்லது மத பாகுபாடு போன்ற தீவிரவாத சித்தாந்தங்களை ஆதரிப்பதை அல்லது ஊக்குவிப்பதை தவிர்க்கவும். வன்முறை, போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் அல்லது துஸ்பிரயோகம் போன்ற இடையூறு விளைவிக்கும் செயல்கள் தொடர்பான நிகழ்வுகளைப் புகாரளிக்கும் போது அல்லது பகிரும்போது எச்சரிக்கையாக இருங்கள். சமூக நல்வாழ்வை சீர்குலைக்கும் செயல்கள் தொடர்பான நிகழ்வுகளை அறிக்கையிடுவதற்கு அல்லது பகிர்வதற்கு முன், அந்தச் செய்தியைப் பகிரவேண்டுமா என்ற அவசியத்தை கவனமாகக் ஆராயுங்கள். நீங்கள்

அறிக்கையிட அல்லது பகிரத் தீர்மானித்தால், அத்தகைய செயல்களை நியாயப்படுத்துவதையோ அல்லது விளம்பரப்படுத்துவதையோ தவிர்த்து, உணர்திறன் மற்றும் எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்.

சமூக ஊடகங்களை வெறுப்பைப் பரப்புவதற்கான தளமாகப் பயன்படுத்துவதையும் வெறுப்புப் பேச்சுப் பக்கங்களைத் தவிருங்கள். சமூக ஊடகங்களில் விவாதங்கள் மற்றும் கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபடும்போது, விவாதங்கள் வரவேற்கத்தக்கவை என்றாலும், தலைப்பில் மாத்திரம் கவனம் செலுத்தி, பகுத்தறிவைப் பேணுங்கள்.

தரக்குறைவான கருத்துக்களை கூறுவதை தவிருங்கள்.

தனிநபர்களின் இனம், பாலினம், பாலியல் நோக்குநிலை அல்லது உடல் மற்றும் மன திறன்களின் அடிப்படையில் பாரபட்சமான இழிவான கருத்துக்களை வெளியிடுவதையோ அல்லது தப்பெண்ணத்தை வெளிப்படுத்துவதையோ தவிர்ப்பது இன்றியமையாதது. ஒரு நபரின் இனம், பாலியல் நோக்குநிலை அல்லது இயலாமை ஆகியவை கதைக்கு நேரடியாகப் பொருத்தமானதாக (தொடர்புடையதாக) இருந்தால் மட்டுமே குறிப்பிடவும்.

பணிவாக செயற்படுங்கள்

சமூக ஊடகங்கள் ஒரு பொது அரங்காகச் செயல்படுகிறது. அங்கு அனைத்து தனிநபர்களும் மரியாதைக்குரிய ஈடுபாட்டிற்கு உரிமை உண்டு. நீங்கள் தொடர்பாடலின்போது கண்ணியம் மற்றும் பணிவு ஆகியவற்றை வளர்த்துக் கொள்வதோடு மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கவும் மற்றும் அவர்களின் கருத்து வெளிப்பாட்டிற்கும் இடத்தை வழங்குங்கள். கருத்து வேறுபாடு ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றாலும், கருத்து வேறுபாடுகளை வெளிப்படையாக அணுகி சர்ச்சைக்குரிய விதத்தில் செயற்படுவதையும் தவிருங்கள். எதிரெதிர் கருத்துக்களை நீங்கள் சரிசெய்ய முடியாவிட்டால், உங்கள் கருத்து வேறுபாட்டை மரியாதையுடனும் வெளிப்படையாகவும்

வெளிப்படுத்துங்கள்.

**சமூகத்தை தவறாக வழிநடத்தாதீர்கள்**

சமூக ஊடகங்களில் தகவல்களை வெளியிடும்போது மற்றும் விநியோகிக்கும்போது தவறான தகவல்களைப் பகிர்வதையோ அல்லது உண்மைகளை மிகைப்படுத்துவதையோ தவிர்க்கவும், ஏனெனில் அது சமூக ஊடக பாவனையாளர்களைத் தவறாக வழிநடத்தும்.

உங்கள் சமூக ஊடக தளம் கட்டுக்கதைகள் அற்ற தளமாக இருப்பதை உறுதிசெய்வதுடன் கட்டுக்கதைகளை விளம்பரப்படுத்துவதைத் தவிர்க்கவும்.

வணிக நோக்கங்களுக்காகத் தகவல் அல்லது யோசனைகளை இடுகையிடும்போது அல்லது பகிரும்போது, உங்கள் நோக்கங்களை வெளிப்படையாக வெளிப்படுத்துங்கள். சமூக ஊடகங்களில் நிலவும் மோசடிகள் மற்றும் மோசடி நடவடிக்கைகள்குறித்து எச்சரிக்கையாக செயற்படுங்கள். இது போன்ற ஏமாற்று செயல்களை ஒருபோதும் ஆதரிக்கவோ, ஊக்குவிக்கவோ அல்லது பங்கேற்கவோ வேண்டாம்.

தனியுரிமை மற்றும் நற்பெயருக்கு மரியாதை அளிப்பதுடன் அதனைப் பாதுகாக்கவும்.

தனிநபர்களின் அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் அவர்களின் தனியுரிமைக்கு மரியாதை அளியுங்கள். இதேபோல், தனிநபர்களின் நற்பெயரை நிலைநிறுத்துவதுடன் யாருடைய தனியுரிமை அல்லது நற்பெயருக்கு வேண்டுமென்றே களங்கம் விளைவிப்பதை தவிருங்கள். தரக்குறைவான கருத்துக்கள் வெளியிடுவதனை தவிருங்கள். உண்மையைப் பேசுவது யாரையும் தரக்குறைவாகக் கருதாது என்றாலும் கூட, ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றிய தகவல்களைப் பகிர்வது உண்மையான பொது நலனுக்குப்

பயன் விளைவிக்கும் என்றால் மட்டுமே நிகழ வேண்டும். சமூக நம்பிக்கைகளை பேணுதல்.

பொது நலன் அல்லது ஒழுக்கத்திற்கு தீங்கு விளைவிக்கும் அல்லது அந்தஸ்தைக் குறைக்கக்கூடிய எதையும் பதிவிடுவதையோ அல்லது பகிர்வதையோ தவிர்க்கவும். பொதுநலன் கருதியே தவிர, ஆபாசமான விடயங்களைப் புகாரளிப்பதைத் தவிர்க்க வேண்டும். சிற்றின்பம், விபச்சாரம் அல்லது விபச்சாரத்தை ஊக்குவிக்கும் வகையிலான செயல்கள் தவிர்க்கப்பட வேண்டும். அத்தகைய தகவல்களை அல்லது யோசனைகளை நீங்கள் இடுகையிட்டால் அல்லது பகிர்ந்தால், உங்களைப்பற்றிய அணுகுமுறை, வாழ்க்கை முறை மற்றும் சமூகத்திற்கான வாழ்க்கையைப் பற்றிய கண்ணோட்டத்தையே அவை பிரதிபலிக்கின்றன.
சமூக ஊடக வழிகாட்டுதல்களை மீறாதவை இன்னும் நம் சமூக சூழலில் ஆபாசமானதாகவோ அல்லது பொருத்தமற்றதாகவோ கருதப்படலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இதுபோன்ற வி'யங்களில் கவனம் செலுத்தி, அதற்கேற்ப எச்சரிக்கையாக இருங்கள்.

**மரணத்தை பேசுபொருளாக்குவதை தவிர்க்கவும்.**

தற்கொலை சம்பவங்களை பொறுப்புடன் புகாரளிக்கவும் அல்லது அவ்வாறு செய்வதை முற்றிலும் தவிர்க்கவும். புகாரளித்தால் அல்லது பகிர்ந்தால், அது தற்கொலையை ஊக்குவிக்காது என்பதை உறுதிசெய்து, செயலின் குறிப்பிட்ட விவரங்களைக் குறிப்பிடுவதைத் தவிர்க்கவும். தற்கொலை செய்யும் முறையை பரபரப்பாக்கவோ அல்லது இறந்தவரின் புகைப்படங்கள் அல்லது வீடியோக்கள் போன்ற கிரா.ஂ.பிக் உள்ளடக்கத்தை வெளியிடவோ வேண்டாம். அதேபோல், இயற்கை பேரிடர்களால் இறந்தவர்களின் உடல்களை அல்லது கொலை செய்யப்பட்டவர்களின் உடல்களை காட்சிப்படுத்துவதை தவிர்க்கவும்.

சில தனிநபர்களுக்கு அல்லது குழுக்களுக்குக் காணப்படும் உரிமைகளைப் புரிந்துகொண்டு அதற்கு மதிப்பளிக்கவும்.

பொதுச் சமூகத்தில், குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு சிறப்புப் பரிசீலனைகள் மற்றும் முன்னுரிமைகள் வழங்கப்படுகின்றன. சமூக ஊடகங்களில் இந்தக் குழுக்களைப் பற்றி விவாதிக்கும்போது, அவர்களின் தனியுரிமைக்கு மதிப்பளித்து, களங்கத்தைத் தவிர்க்கும் விதத்தில் உண்மைகளை முன்வைப்பது அவசியமாகும். சிறுவர் ‘துஸ்பிரயோகம் அல்லது பாலியல் வன்புணர்வு சம்பந்தப்பட்ட வழக்குகளில், பாதிக்கப்பட்டவரின் பெயர், புகைப்படங்கள் அல்லது உறவினர்கள் அல்லது நண்பர்களைப் பற்றிய தகவல்கள் உட்பட, பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தை வெளிக்கொணர வழிவகுக்கும் எந்த வித விவரங்களும் வெளியிடுவதைத் தவிர்க்கவும்.

குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் சிறார்களின் பெயரைக் குறிப்பிடுவதை தவிர்க்கவும் , அவர்களை அடையாளம் காணும் வகையில் புகைப்படங்களை வெளியிடக் கூடாது. குறைந்த வயதையுடைய (மைனர்) அல்லது வயது வந்தவர் குற்றம் சாட்டப்பட்ட அல்லது குற்றம் இழைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில், அவர்களுக்கும் அவர்களது உறவினர்கள் அல்லது நண்பர்களுக்கும் இடையிலான உறவை வெளிப்படுத்துவது பொது நலன் கருதி மாத்திரமே நிகழ வேண்டும்.

திருமணம் மற்றும் விவாகரத்து வழக்குகள்குறித்து புகாரளிக்கும்போது, அந்த அறிக்கைகள் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தாது அல்லது அவர்களின் தனியுரிமை மீறப்படாது என்பதை உறுதிப்படுத்தவும்.

பரந்த சமூகம் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகிய இரண்டிலும், பெண்கள் பாலியல் வன்முறை, பல்வேறு வகையான அடக்குமுறை மற்றும் ஆக்கிரமிப்பு ஆகியவற்றால் பெரும்பான்மையாகப் பாதிக்கப்படுகின்றனர். பெண்களை இத்தகைய துன்புறுத்தலுக்கு ஆளாக்குவதற்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்தாமல், சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறைகளை அகற்றவும் குறைக்கவும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வழிமுறையாக நாம் சமூக ஊடகத்தைப் பயன்படுத்த வேண்டும்.

உங்கள் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்து, உங்களைப் பாதுகாத்துக் கொள்ள உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

சமூக ஊடகங்கள் தனிநபர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தவும் சமூக மாற்றத்தை ஏற்படுத்தவும் அதிகாரம் அளித்தாலும், அது ஒரு இருண்ட பக்கத்தையும் கொண்டுள்ளது. தகவல்களை பரப்புவதிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் அதன் பங்கு இருந்தபோதிலும், சமூக ஊடகங்கள் மனித கடத்தல் உட்பட பல்வேறு வகையான சுரண்டல்களை எளிதாக்கியுள்ளன.

ஏமாற்றுதல்கள், மோசடிகள் மற்றும் தவறான வழிகாட்டுதல்கள் என்பன சமூகத்திலும் சமூக ஊடகங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றன. ஒரு சமூக ஊடக பயனராக, மோசடிகள், ஏமாற்றுதல்கள் மற்றும் தவறான வழிகாட்டுதல்களுக்கு இரையாகாமல் செயல்பட எச்சரிக்கையுடன் செயல்படவும்.

பின்பற்ற வேண்டிய சில வழிகாட்டுதல்கள் பின்வருமாறு:

1. சமூக ஊடகங்களில் எவருடனும் தனிப்பட்ட தகவல்களைப் பகிர்வதைத் தவிர்க்கவும்.

2. வங்கிக் கணக்கு அல்லது கடனட்டை எண்கள், அடையாள அட்டை போன்ற உங்கள் நிதி விவரங்களை நம்பத் தகாத நபர்களுக்கோ வணிகங்களுக்கோ வழங்குவதைத் தவிர்க்கவும்.

3. உங்கள் வங்கி அட்டை அல்லது கடன் அட்டை ரகசிய எண்ணை யாருக்கும் வழங்காதீர்கள்.

4. ஆன்லைன் போட்டிகள் அல்லது அசாதாரண பரிசுகளை உறுதியளிக்கும் விளம்பரங்களில் பங்கேற்கும்போது எச்சரிக்கையாக இருங்கள். குறிப்பாக அவர்கள் நன்கு அறியப்பட்ட பிரபலமான நிறுவனங்களுடன் தொடர்புடையதாகக் கூறினால், சந்தேகம் கொள்ளுங்கள். சலுகையின்.'.பரிசின் சட்டப்பூர்வத்தன்மையை சரிபார்க்க நேரம் ஒதுக்குங்கள், இது ஒரு மோசடி அல்ல மற்றும் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதை உறுதிப்படுத்தவும்.

5. சமூக ஊடகங்கள் மூலம் நீங்கள் ஏமாற்றப்பட்டிருந்தால், உங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால், உடனடியாக காவல்துறை மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்குத் தெரிவிக்கவும். நடைமுறையில் உள்ள பல சட்ட விதிகளின் உதவியோடு ஆன்லைன் அல்லது சமூக ஊடக அடிப்படையிலான கடத்தல் தொடர்பான விசாரணைகள், இந்த சட்டவிரோத செயல்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க வழிவகுக்கும், இருப்பினும், பல பாதிக்கப்பட்டவர்கள் அவமானம் அல்லது பிற காரணங்களால் வெளிப்படுத்தவோ அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கவோ தயங்குகிறார்கள். நீங்கள் அனுபவித்த துயரத்தைப் பற்றிப் பேசுவதன் மூலம், உங்களுக்காக நீதியைத் தேடுவது மட்டுமல்லாமல், மற்றவர்களை இதே போன்ற அநீதிகளுக்குப் பலியாவதைத் தடுக்கலாம்.